



அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி காரைக்குறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் ஒன்றிய செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.இராஜன், கழக இளம் பேச்சாளர் மகிழவன், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநகர் மாவட்டம் தொடர் நிகழ்ச்சியாக கோவை பீளமேடு, வார்டு எண் 26,எல்லைத் தோட்டம் ரோடு வ.உ.சி.காலனி மைதானத்தில் நடைபெற்ற, கைப்பந்து போட்டிகளை தொடங்கி வைத்து கைப்பந்து போட்டிகளில் பங்கேற்ற அணிகளின் விளையாட்டு வீரர்களை,கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் வாழ்த்தினார். பீளமேடு பகுதி 1 செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட்டக்கழகச் செயலாளர்கள் 26 வது வார்டு ஆ.மாடசாமி,24 வது வார்டு ஏ.எஸ்..நடராஜ், பகுதிக்கழக நிர்வாகிகள் பூ.வெ.துரைசாமி,கிரீன்வே சுப்பிரமணியம்,ஏ.டி.காலனி ரவி, டி.எம்.மணி,ஜெயராஜ் , செல்வராஜ், லட்சுமி,பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வசந்தகுமார், இளைஞரணி துணை அமைப்பாளர் க.மணிகண்டன்,மகாலிங்கம், கோவிந்தராஜ் ,பாலச்சந்திரன், மகேஷ் கண்ணன், சரத், லோகநாதன், சுரேஷ்குமார், தகடூர் செல்வம், டெம்போ குருசாமி, தங்கையன், பிரனீத், சத்தியராஜ், பட்டேல், பரத்குமார் , தினேஷ்குமார்வேலுசாமி, ஹரிஷ், மனோஜ், அக்பர் அலி, நாகராஜ், சங்கர், தாமரை துரை, சதீஷ்,பிரனீத், அனுசுயா, விஜயலட்சுமி, வெங்கடேசன், ரஞ்சித், கார்த்திக் குமார், சரத் லோகு, சுரேந்திரன், சம்பத்குமார், இங்கர்சால்,கிருஷ்ணா, குமார், மகேஸ்வரன், ஐயப்பன்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டத்தில் சிப்காட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா!

# ஜாகிர் அம்மாபாளையத்தில் 120 ஏக்கர் பரப்பில் இடம் தேர்வு!

### அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பார்வையிட்டு ஆய்வு!

சேலம், டிச.25-

தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா சேலம் மாவட்டத்தில் சிப்காட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஜாகீர் அம்மாபாளையத்தில் 120 ஏக்கர் பரப்பளவிற்கு தேர்வு செய்யப் பட்டுள்ள இடத்தினை 22.12.2024 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செல்லசேது. ரவிக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற மருத்துவ முகாமை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன், கொள்ளிடம் மேற்கு ஒனறிய கழக செயலாளர் செல்லசேது. ரவிக்குமார், மாவட்ட கழக அவைத்தலைவர் கே. சீனிவாசன், சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தினேஷ்குமார், கொள்ளிடம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் வீரப்பன் சத்திரம் பகுதி கழகத்தின் சார்பில் ஆண்கள், பெண்களுக்கான கபாடி போட்டி பகுதி கழக செயலாளர் வி.வி.நடராஜன் தலைமையில் நடைபெற்றது. வெற்றி பெற்ற மகளிர் அணியினருக்கு மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் வெற்றி கோப்பையை வழங்கினார். நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

இந்த ஆய்வுக்கு பின்னர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ர்.பி. ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பகுதிகளுக்கும் தொழில் வளர்ச்சி கிடைத்திடவும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் என அனைத்துத் தரப்பினருக்கான வேலைவாய்ப்பினை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 11.12.2021 அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சேலம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்கப்படும் எனவும், வெள்ளிக்கொலுசு உற்பத்தியாளர்கள் தொழில் தொடங்குவதற்கு வசதியாக புதிய பன்நோக்கு உற்பத்தி மையம் அமைக்கப்படும் எனவும், இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில் கருப்பூரில் டைடல் மென்பொருள் தொழில் பூங்கா அமைக்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.05.2023 அன்று சேலம் மாவட்டம், ஓமலூர்வட்டம், ஆணைக்வுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் பகுதிகளை உள்ளடங்கிய நிலப்பரப்பளவில், ரூ.29.50 கோடி மதிப்பீட்டில், 55,000 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 3 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டும் பணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி, பின்னர் 23.09.2024 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்து தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

அதேபோன்று "கொலுசு உற்பத்தியில் தலைசிறந்து விளங்கக் கூடிய சேலம் மாவட்டத்தில் நுhற்றுக்கும் மேற்பட்ட கொலுசு உற்பத்தியாளர்கள் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு வசதியாக பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கப்படும்" என்ற அறிவிப்பிற்கிணங்க கடந்த 25.08.2022 அன்று சேலம், அh¨யாகவுண்டம்பட்டியில் 1.20 ஏக்கர் பரப்பளவில் ரூ.25.29 கோடி மதிப்பீட்டில் கொலுசு உற்பத்தியாளர்களுக்கான பன்மாடி உற்பத்தி மையம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த கொலுசு உற்பத்தியாளர்களுக்கான பன்மாடி உற்பத்தி மையக் கட்டடம் ஒரு தளத்திற்கு 34 கடைகள் வீதம் 3 தளங்களுடன் 102 கடைகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, சேலம், சிப்காட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஜாகீர் அம்மாபாளையத்தில் 120 ஏக்கர் பரப்பளவில் தேர்வு செய்யப் பட்டுள்ள இடத்தினை இன்றையதினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஜவுளிப்பூங்காவில் நூல் பதனிடுதல், கஞ்சி தோய்த்தல், நெசவு, ஜவுளி உற்பத்தி, துணி பதனிடுதல் மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி போன்ற தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் பயனடைவார்கள். இந்த ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைப்பதன் மூலம் சேலம் மண்டலத்தில் சுமார் 10,000 நபர்கள் நேரடியாகவும், 30,000 முதல் 40,000 நபர்கள் வரை மறைமுகமாகவும் பயனடைய வாய்ப்பாக அமையும். இந்த ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழில்துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

முன்னதாக தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தொழிற்துறை வளர்ச்சிக்கேற்ப சேலம் விமான நிலைய விரிவாக்கம் தொடர்பாக விமான நிலைய அலுவலர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

அதேபோன்று, ஓமலுhர் வட்டம், ஆணைகவுண்டன்பட்டி மற்றும் கருப்பூh; பகுதிகளை உள்ளடங்கிய நிலப்பரப்பளவில், ரூ.29.50 கோடி மதிப்பீட்டில், அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள மினி டைடல் பூங்காவினை தொழில்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுகளின் போது சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில் ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், விமான நிலைய இயக்குனர் வைத்தியநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, விமான நிலைய உதவி இயக்குநர் ரமேஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த

# திருவண்ணாமலை என்.கண்ணன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

### கழகத்தினர் - உறவினர் - நண்பர்கள் அஞ்சலி!



திருவண்ணாமலை, டிச. 25 -

சென்னை மாவட்டம், முரசொலி அலுவலக விநியோகப் பிரிவில் பணியாற்றிய திருவண்ணாமலை என்.கண்ணன் கடந்த ஆண்டு (25.12.2023) அன்று உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

அதனையொட்டி அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (25.12.2024 புதன்கிழமை) அன்னாரின் இல்லம், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகில் உள்ள தென் பள்ளிப்பட்டு கிராமத்தில் உள்ள இல்லத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்யப்படுகிறது.

இதில் கழக நிர்வாகிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்துகின்றனர்.

## அரியலூர் மாவட்டம்

# தா.பழூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் தெருமுனைக் கூட்டம்!

### வி.பி.ராஜன் - மகிழவன் - சுபா. சந்திரசேகர் சிறப்புரை!

அரியலூர்,டிச, 25-

அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில்,காரைகுறிச்சியில், கழக இளைஞரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரம் கூட்டம், மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதலின்படி

ஒன்றிய கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் பொதுக் குழு உறுப்பினர், இரா. அண்ணாதுரை வரவேற்புரையாற்றினார்.

தலைமை கழக பேச்சாளர் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.இராஜன், கழக இளம் பேச்சாளர் மகிழவன், கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச்செயலாளர் சுபா.சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் என்.ஆர்.இராமதுரை,

அவைத்தலைவர் எஸ். சூசைராஜ், துணைச் செயலாளர்கள் க.சாமிதுரை, இராஜேந்திரன், இந்துமதி நடராஜன், ஒன்றிய பொருளாளர் த.நாகராஜன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர். தமிழ்ச்செல்வன்,

கோவி.சீனிவாசன், சி.கண்ணதாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா. சங்கர், த.சம்பந்தம், த.குணசீலன், முனைவர்மு.முருகானந்தம், க. நளராசன், அ.தங்க பிரகாசம், எழிலரசி அர்ச்சுனன் மற்றும் கிளை கழக செயலாளர்கள், கழக தோழர்கள்,பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிறைவாக கிளை கழக செயலாளர் ரெ. கொளஞ்சி குமார் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு செ. அரங்கராசன்
### டிசம்பர் 25 (2002)



ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. காசிநாதன்
### டிசம்பர் 25 (1991)



தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.

கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.